**செய்தி வெளியீடு எண்: 155** **நாள்: 16.2.2010**

**<u>செய்திக் குறிப்பு</u>**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, மாணவர்களுக்கும் வேலை நாடுநர்களுக்கும் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளைப் பல்லாண்டு காலமாக அளித்து வருகிறது. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு அதற்கு தக்கவாறு தொழில்நெறி வழிகாட்டுதலை மேற்கொள்ளும் வகையில் அரசு +2 வகுப்பு மாணவர்களுக்கான உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதலை சென்னை BSNL நிறுவனத்தின் உதவியுடன் இலவச தொலைபேசி (Toll Free) வாயிலாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

+2 பயிலும் மாணவர்கள் தங்களின் எதிர்காலத்தினை நிர்ணயிக்கும் வகையில் சென்னை BSNL நிறுவனம் இலவச குறுகிய கால தொலைபேசி அழைப்பு வசதியினைத் தற்போது வழங்கியுள்ளது. இதன்படி சென்னை BSNL நிறுவனத்தின் எல்லைக்குட்பட்டுள்ள சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலிருந்து BSNL-ன் தரைவழி மற்றும் அலைபேசி வழி மேற்கொள்ளப்படும் தொலைபேசி அழைப்புகளுக்கு கட்டணமின்றி இலவசமாக (Toll Free) உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதல் தகவல்களைப் பெறலாம். இந்நிகழ்ச்சியானது வரும் 18.02.2010, 19.02.2010, 20.02.2010, 22.02.2010, 23.02.2010 ,24.02.2010 மற்றும் 25.02.2010 ஆகிய ஏழு நாட்களுக்கு நடத்தப்படவுள்ளது. மேற்குறிப்பிட்ட நாட்களில் தினமும் முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை நடைபெறும். இந்நிகழ்ச்சியானது சென்னை 32, கிண்டி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, ஆணையரக கூட்ட அரங்கினில் இருந்து நடத்தப்பெறும். மேலும் இவ்வழிகாட்டி நிகழ்ச்சியில் பொறியியல், மற்றும் பொறியியல் சார்ந்த படிப்புகள் மற்றும் அதற்குரிய வேலைவாய்ப்புகள், மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகள், வணிகவியல், கணிதம் மற்றும் அதைச் சார்ந்த படிப்புகள், கணினி மற்றும் அதற்குரிய வேலைவாய்ப்புகள் அறிவியல் படிப்புகள் மற்றும் பொதுவான வேலைவாய்ப்பு தரும் படிப்புகள் மற்றும் இதர தொழில்சார் படிப்புகள் ஆகிய கல்வித் தொடர்பான விவரங்கள் பெறலாம்.

இந்நிகழ்ச்சியில் மேற்கூறிய தினங்களில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்களால் எழுப்பப்படும் வினாக்களுக்கு வேலைவாய்ப்புத் துறை அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய வல்லுநர்கள் உரிய ஆலோசனைகளை வழங்கவுள்ளனர். இந்த வழிகாட்டும் நிகழ்ச்சியினை அரசுமுதன்மைச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அவர்கள் வரும் 18.02.2010 அன்று முற்பகல் 10.00 மணியளவில் தொடங்கி வைப்பார்கள்.

மேற்கூறிய ஏழு தினங்களில் பெற்றோர் மற்றும் மாணவ, மாணவியர்கள், உரிய ஆலோசனைகளைப் பெற BSNL–ன் தரைவழி மற்றும் அலைபேசி வழியாக **<u>12799</u>** என்கிற எண்ணிற்குத் தொடர்பு கொள்ள வேண்டும். மேற்காணும் வழிகாட்டுதலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு வேலைவாப்பு மற்றும் பயிற்சித் துறை **ஆணையர் திரு ஆ.சு. ஜீவரத்தினம்** அவர்கள் தெரிவித்தார்கள்.

ஆணையர்

* * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.